அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 23/99

எனது இல: தா/1/13(1)

அரசாங்க நிருவாக
உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக்
கைத்தொழில் அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

1999. 10.29 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின்
பிரதான செயலாளர்கள், மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்,

# அரச அலுவலர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு
## <u>தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதி</u>

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 55 (4) ஆம் பிரிவினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ்,, அரச அலுவலர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முறை மற்றும் அவ் அதிகாரமளித்தல் நடவடிக்கைமுறை பற்றி 1981.04.08. ஆந் திகதிய தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியில் உள்ளடங்கிய ஏற்பாடுகளுக்குப் பதிலாக அமைச்சரவையினால் புதிய ஏற்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

02. இவ் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட 1999.08.02 ஆந் திகதிய புதிய தாபன விதிக்கோவையின் II ஆந் தொகுதி தற்போது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்புதிய ஏற்பாடுகள் 1999 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

03. இதுவரை நடைமுறையில் இருந்த தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியும் அதனை திருத்தி வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளும் அவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தற்போது ஆரம்பித்துள்ள முறைசார் ஒழுக்காற்று விசாரணை பாதியாதவாறு இதனால் இரத்துச் செய்யப்படுவதுடன் அதற்குப்பதிலாக புதிய ஏற்பாடுகள் பதிலீடு செய்யப்படும்.

04. இந்தப் புதிய தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதியின் ஏற்பாடுகளின் வரைவிலக்கணங்களுடன் தொடர்பான பிரச்சினைகள் அல்லது அத்தொகுதி 11 இல் வராத ஏதேனும் விடயங்கள் எழுந்தால் தாபன பணிப்பாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

05. தாபன விதிக்கோவையின் புதிய II ஆம் தொகுதியின் அச்சுப் பிரதிகளை கொழும்பு 01, லோட்டஸ் ரோட் 32 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள அரச வெளியீட்டுப் பணியகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்/ (மஹிந்த பந்துசேன)
செயலாளர்

அரசாங்கநிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சு